**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.02.2026**
**REP.No.13/2016**
**வழக்கு சாட்சி PW.2– பாலகிருஷ்ணன், த/பெ.லட்சுமணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2ம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**2ம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் போட்டோ கிராபராக 20வருடங்களாக வேலை செய்து வருகிறேன். அதற்கு முன்பு தெர்மல் அனல் மின் நிலையத்தில் கான்ராக்ட் பணியாளராக இருந்தேன். எனது நிருபண வாக்குமூலத்தில் பத்தி 4ல் வாதி ஒரு சிறந்த புகைப்படக்காரர் என்பதற்கு அடையாளமாக அவர் எடுக்கும் புகைப்படங்கள் மேட்டூர் தெர்மல் மின் வாரியம் இவரை தவிர யாரையும் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள் என்று குறிப்பிட்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு தெர்மல் மின் நிலையத்திலிருந்து புகைப்படம் எடுப்பதற்கு அவருக்கு ஏதேனும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் அது சம்மந்தமான ஆவணங்கள் என்னிடம் இல்லை.

2) வாதியுடைய ஆவணங்கள் என்னென்ன பார்த்து சொத்துக்கள் குறித்து தெரிந்து கொண்டேன் என்றால் அவருடைய பட்டாவை பார்த்துள்ளேன். அந்த பட்டாவில் என்ன சர்வே எண், என்ன விஸ்தீரணம் மற்றும் அந்த பட்டாவின் எண் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன அளவுள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தார் என்றும், அது தொடர்பாக என்ன தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுள ன்று எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை. வாதி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பும், பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், தற்போது நினைவில்லை, வாதி தாக்கல் செய்த வழக்கில் சுவற்றை இடிக்க கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

3) நான் வாதியின் வீட்டிற்கு பலமுறை சென்றுள்ளேன். வாதியின் வீட்டின் வடபுறமுள்ள சுவர் மட்டும் தான் வாதியுடையது என்றும், மற்ற மூன்று புறங்களும் உள்ள சுவர்கள் வேறு நபர்களுடையது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு மேற்குபுறமுள்ள சுவரானது பிரதிவாதியின் சுவர் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்டும் அ.வ.எண்.298/2010 தீர்ப்புரையில் வாதியான ஜெயக்குமார் தென்வடலாக உள்ள காம்பௌண்ட் சுவற்றுக்கு 9 இஞ்ச் இடைவெளி விட்டு காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளதாகவும், அந்த காம்பௌண்ட் சுவரானது 1ம் பிரதிவாதி பூமிசெட்டிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) அந்த 9 இஞ்ச் இடைவெளியில் வாதி 1ம் பிரதிவாதி பூமிசெட்டியின் இடத்திற்கு பாதிப்பில்லாமல் பைப் லைன் அமைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 3 அடி உயரமுள்ள காம்பௌண்ட் சுவற்றை 1ம் பிரதிவாதி 8 அடியாக உயர்த்தி கட்டிக்கொள்ள வாதிக்கு ஆடசேபனை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி பூமிசெட்டிக்கு பாத்தியப்பட்ட கிழக்குபுறமுள்ள காம்பௌண்ட் சுவற்றை வாதி பராமரித்து வருவதற்கு 1ம் பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) தீர்ப்பில் 9 இஞ்ச் இடைவெளி உள்ளதாக தான்குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் 20 இஞ்ச் இடைவெளி உள்ளது என என் நிரூபண வாக்குமூலத்தில் நான் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் பட்டாவில் அவ்வாறு தான் இருந்தது. பட்டாவில் வடக்கு புறம் 8 மீட்டரும், தெற்கில் 7.2 மீட்டரும் மட்டும் தான்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெற்கிலும் 8 மீட்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 20 இஞ்ச் அளவு இடைவெளி இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட சர்வேயர் வரைபடத்தில் பிரதிவாதிக்கு வடபுறம் 8 மீட்டரும், தென்புறம் 7.2 மீட்டரும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

பட்டாவிலும் அதே அளவுகள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, பழைய வருவாய் ஆவணங்களை வாதி காண்பித்துள்ளார், அதில் 8 மீட்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) பழைய ஆவணங்களில் குறிப்பிட்டதை விட அளவுகள் புதிய ஆவணங்களில் குறைவாக காண்பித்திருந்தால் அது தொடர்பாக வாதி வருவாய் துறையினரிடம் ஆட்சேபனை தெரிவித்து மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதியே காம்பௌண்ட் சுவர் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் தீர்ப்புரை பெற்றுள்ளார் என்றும், ஆனால் நான் அதற்கு முரணாக அந்த காம்பௌண்ட் சுவர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.175/2011 என்ற வழக்கில் வாதியான பூமிசெட்டிக்கு ஆதரவாக 3 அடியுள்ள காம்பௌண்ட் சுவரை 8 அடியாக உயர்த்தி கட்டிக்கொள்ளலாம் என்று தெரிவித்ததன் பேரில் தான் அவர் அந்த காம்பௌண்ட் சுவற்றை உயர்த்தி கட்ட முற்பட்டார் என்றும், ஆனால் அதை அவர் இடிக்க முற்பட்டதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

7) வாதிக்கு உண்மையில் காம்பௌண்ட் சுவர் இருந்தால் அதை அவர் 1ம் பிரதிவாதி பூமிசெட்டிக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 9 இஞ்ச் இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா என்று பார்ப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் சொத்துக்களை ஆய்வு செய்து பிரதிவாதி 9–3/4 இஞ்ச் இடைவெளி விட்டுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காம்பௌண்ட் சுவரானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் அந்த காம்பௌண்ட் சுவர் வாதியுடையது தான். வாதி மேற்கண்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை.

இடைவெளியிலுள்ள அளவுகளை நான் ஏதேனும் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை, அளக்கும் போது நான் உடன் இருந்தேன்.

8) நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை அளந்து பார்த்து, ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று அறிக்கை தாக்கல் செய்திருந்தாரா என்றால் அளக்க வந்த சர்வேயர் 1ம் பிரதிவாதியின் சொந்த மருமகன் ஆவார். அவர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. அவர் எந்த ஊரில் வேலையில் இருந்தார் என்றால் தெரியவில்லை. நான் சொல்வது தவறு என்றும், மேட்டுர் நகராட்சியிலிருந்துதான் சர்வேயர் வந்து நிலத்தை அளந்து பார்த்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மருமகனும் உடன் இருந்தார். 1ம் பிரதிவாதி ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த ஆவணத்தில் அவர் கையொப்பம் செய்தார் என்றால் தேதி நினைவில்லை, பட்டா மாறுதலுக்கான ஆவணத்தில் கையொப்பம் செய்தார். அந்த பட்டா மாறுதலுக்கு யார் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்டது.

9) என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது பட்டா மாறுதலா அல்லது கிரைய ஆவணமா என்று எனக்கு தெரியவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் கவுன்சிலர் வந்து வாக்குவாதம் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்களை கொடுத்துள்ளேனா என்றால் நான் கொடுக்கவில்லை, வாதி கொடுத்துள்ளார், அந்த வீடியோவை எடுத்தது நான் தான். வாதி தன் வழக்கில் தானே ஒரு புகைப்பட கலைஞர் என்றும், புகைப்படங்கள் மற்றும் வீடியோவை தானே எடுத்ததாக தான் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் வீடியோவை நான் தான் எடுத்தேன், புகைப்படங்களை நான் எடுக்கவில்லை.

10) வழக்கின் சங்கதிகளை தெரியாமல் பொய்யாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவிற்கு மாறாக 1ம் பிரதிவாதியின்

சுவற்றை வாதியின் சுவர் என்ற பொய்யாக தெரிவிப்பதால் நானும், நீதிமன்ற அவமதிப்பு தான் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய்யான சாட்சியம் என்பதால் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.